(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 75 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, மாச்சு 6, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0553 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கடந்த 15 வருடங்களாக, இற்றைவரை ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவையும்,

(ii) ஈரானிடம் இருந்து நாம் கொள்வனவு செய்த விலையை அன்றைய உலக சந்தைவிலையுடனும்,

(iii) அதனை நாம் கொடுப்பனவு செய்துள்ளோமா அல்லது கடனிற்குக் கொண்டு வந்தோமா என்பதையும்,

(iv) கடனுக்குக் கொள்வனவு செய்திருப்பின் கடனிற்கான வட்டி வீதம் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லை எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) ஈரானிடம் இருந்து பெற்றோலியம் கொளவனவு செய்தமைக்காக இற்றைவரை செய்யப்பட வேண்டியுள்ள கொடுப்பனவு எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0554/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) நாட்டின் மொத்த உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் 1948 இல் இருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறப்பட்டவை மீதான செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக எவ்வளவு என்பதையும்,

(iii) மொத்த கடன், அரச மொத்த வருமானத்தின் வீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0555/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வீதிகளின் அபிவிருத்திக்காகவும் பேணுகைக்காகவும் கடந்த ஐந்து வருடங்களாக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும், உண்மையில் செலவு செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும் வருடாந்த அடிப்படையில் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பேணப்பட்ட 10 முக்கிய வீதிகள் எவை என்பதையும், அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப்பாதைகளின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அவற்றிற்கான மதிப்பிடப்பட்ட செலவு, ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்தியாக்க எதிர்பார்க்கும் திகதி என்பன யாவை என்பதையும்,

(iv) விலைமனுக் கோரியோரின் பெயர்கள் எவை என்பதையும், அவர்கள் கோரிய விலைகள் என்ன என்பதையும்,

(v) நிதியளிக்கும் மூலகங்கள் எவை என்பதையும், கடனிற்கான வட்டி வீதம் உட்பட மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1104 / '08

4.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதியொன்று கொள்ளுபிட்டி லிபட்டி பிளாஸா கட்டிடத்தின் 7 ஆம் மாடியில் அமைந் திருந்ததா என்பதையும்,

(ii) மேற்படி சுற்றுலா விடுதி எந்த கம்பனிக்கு எவ்வளவு பணத் தொகைக்கு விற்கப்பட்ட தென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விற்பனை தொடர்பாக அரச மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்,

(ii) இல்லையெனில், விற்பனைக்கான மதிப்பீடு எவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதையும்,

(iii) அவ்வாறாக பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்று சட்டத்திற்கு அமைவானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி கொடுக்கல் வாங்கல் சமபந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா வென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1105 / '08

5.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி யொன்று கிரிமண்டல மாவத்தையில் அமைந்திருந்ததாவென்பதையும்,

(ii) மேற்படி காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணி எந்நிறுவனத்திற்கு எவ்வளவு பணத்தொகைக்கு விற்கப்பட்ட தென்பதையும்,

(iv) மேற்படி காணியை விற்பதற்கு அரச மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீ டொன்று பெறப்பட்டதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி காணியை விற்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதையும்,

(ii) அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாமலும் அரசின் உரிய மதிப்பீடு பெறப்படாலும் இக்காணி விற்பனை செய்யப்பட்டிருக்குமாயின், அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1106 / '08

6.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கட்டடப் பொருட்கள் வழங்குவதற்காக 2005 ஆம் ஆண்டில் "லோரன்ஸ் நட்புறவு அமைப்பு" எனும் அரச சார்பற்ற அமைப்பொன்றுடன் கட்டடப் பொருட்கள் கூட்டுததாபனம் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம் ,சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கு கட்டடப் பொருட்கள் வழங்கப்பட்டதா என்பதையும்,

(iii) பொருட்கள் வழங்கப்படவில்லையெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றாமையின் காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கு மீள செலுத்த நேரிட்ட தொகை எவ்வள வென்பதையும்,

(ii) அதற்காக விற்கப்பட்ட காணி அமைந்திருந்த இடம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இத்தகைய நிதி நஷ்டத்தை ஏற்படுத்தியமை சம்பந்தமாக பொறுப்பேற்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

1114 / '08

7.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் பிரதேச கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அம்பலாங்கொட, 73 ஏ, தித்திலிய பிரிவில் உள்ள காணி களில் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக, அப்போது 12,500 ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது என்பதையும்,

(ii) பிற்காலத்தில் இவ்வீடமைப்புக் கடன் "காலம் கடந்த வீடமைப்புக் கடன்" என்ற வகையில் பதிவழிக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீடமைப்புக் கடனைச் செலுத்தாதவர்களை நீதிமன்ற கட்டளையின்படி வீடமைப்பு மற்றும் சொத்து தடைக்கு உள்ளாக்கியிருப்பதன் காரணம் யாது,

(ii) இவ்வீடமைப்பு கடனை "காலம் கடந்த வீடமைப்பு கடனாக" பதிவழித்து இந்த அப்பாவி மக்களுக்கு நிவாரணமளிப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1115 / '08

8.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாவலபிட்டி, தெகிந்த, இசதின் குடியேற்றத்திட்டத்தில் 29ஆம் இலக்க இடத்தில் வதிகின்ற பி. என். வில்சன் கஹவத்த பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான கெட்டபூலா பார்கேல் தோட்டத்தில் வெளிக்கள உதவியாளராக சேவையாற்றினார் என்பதையும்,

(ii) 1998.04.02 ஆம் திகதி முதல் இவருடைய சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. வில்சன் நாவலபிட்டி சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தரிடம் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் 1999.06.25 ஆம் திகதி நடத்தப்பட்ட விசாரணையில் வழங்கப்பட்ட தீர்ப்பு யாது,

(ii) மீண்டும் செய்த முறைப்பாடு சம்பந்தமாக ஒழுங்கானமுறையில் விசாரணை நடத்தாமல் முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்ததன் காரணம் யாது,

(iii) பெரும் அநீதிக்குள்ளாகியுள்ள திரு.வில்சனுக்கு நிலுவைச் சம்பளத்துடன் மீண்டும் வேலை பெற்றுக் கொடுப்பாரா

என்பதை அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1116 / '08

9.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹார,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளர், ஆயுர்வேத ஆணையாளர் மற்றும் பிரதி ஆணையாளர் பதவிகளை வகிக்கின்றவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாதென்பதையும்,

(ii) அவர்கள் மேற்படி உத்தியோகங்களுக்கான தகைமைகளை பூர்த்திச் செய்துள்ளார்களாயின் அவை என்ன என்பதையும் ,

(iii) ஆயுர்வேத மருத்துவ முறை சம்பந்தமாக அல்லது அதன் நிருவாக தேவைகள் சம்பந்தமாக மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புரிந்துணர்வு இருக்கின்றதா என்பதையும்,

(iv) இன்றேல், மேற்படி பதவிகளுக்கு நியமித்திருப்பது எக்காரணத்தினால் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி உத்தியோகத்தர்களை காட்டிலும் கூடிய கல்வித் தகைமைகளைக் கொண்ட (விடயத்தோடிணைந்த மற்றும் நிருவாகம் சம்பந்தமான ) முதுமானி பட்டங்களை பெற்றவர்கள் ஆயுர்வேத சேவையில் இருக்கின்றார்களென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1120 / '08

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் தொல்பொருளியல் ரீதியாக முக்கியத்துவம் வகிக்கும் இடங்களைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவு,

(ii) இதன் பொருட்டு ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு,

(iii) அது எத்தகைய இடங்களுக்காக

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி இடங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான திட்டமொன்று தொல் பொருளியல் திணைக்களத்திடம் உள்ளதா,

(ii) அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட, முன்னுரிமை வழங்கப்படவேண்டிய இடங்கள் முறையே யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1146 / '08

11.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த, மற்றும் சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப்பட வேண்டுமென இனங் காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவமனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1147 / '08

12.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வந்த மற்றும் சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவ மனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1141 / '08

13.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த நாபிரிததன்கடவர குளத்தின் குளக்கட்டு உடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) குளக்கட்டு உடைந்ததன் காரணமாக இடம்பெயர்ந்துள்ள விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) குளத்தைச் சார்ந்த வயல்வெளியை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்த முடியுமா என்பதையும் ,

(iii) இடம்பெயர்ந்த விவசாய மக்களுக்கு நிவாரனம் வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) குளக்கட்டை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுககப்படுமா என்பதையும்

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

1142 / '08

14.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில அபிவிருத்தி, கமநல சேவை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கமநல அபிவிருத்தி அதிகார சபை 2002.12.31 ஆம் திகதியன்று ஒழிக்கப் பட்டதாக 2004.02.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளின் பிரகாரம் இழப்பீட்டை பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகுவதற்கும், அரச சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் அறிவாரா ?

(ஆ) (i) இழப்பீடு பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகாத பல்வேறு பதவி பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் எத்தனை பேர் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும்,

(ii) குறிப்பிட்ட பதவிப் பிரிவுகளுக்கேற்ப தகுந்த கடமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி பதவிப் பிரிவுகளில் உதவி பணிப்பாளர் /கமநல ஆராய்ச்சி மற்றும் விவசாய விளைவுப் பெருக்க உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கின்ற நிறை வேற்று உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள சேவை திறமைகளுக்கேற்ப கடமைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து பயன்மிக்க சேவையை அரசாங்கம் பெற்றுக்கொள்வதாயின் அவை யாவை என்பதையும்,

(v) மேற்படி (ஆ) (iii) உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் இணைக்கப்பட்டு தற்போது எவ்வளவு காலம் ஆகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1161 / '08

15.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை கலைக்கும்போது நட்டஈடுபெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விலகாத பதவி வகுதிகளைச் சார்ந்த உதவிப் பணிப்பாளர்கள் / கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவை தினைக்களத்தின் பணிப்பாளர் நாயத்தி னால், கமத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளருக்கும் கமத்தொழில் அதிகாரசபையின் ஒழிப்போனுக் கும் பிரதிகள் சகிதம் வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்தை விழித்து DMS/ A மற்றும் L 05 இலக்கமும் 2003.07.03 ஆம் திகதியும் கொண்ட கடிதம் முலம் ஆலோசனை வழங்கப்பட்ட (I) (II) பிரேரணையை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பிரேரணையை அமுல்படுத்துவதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம், பிரேரணை யாவையென்பதையும்,

(ii) இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் போயிருப்பின், அதற்கான காரணம் யாதென்பதையும்

(iii) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நடைமுறையில் இருந்தபோது இவ்வுத்தியோக்கத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் தற்போதும் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த உத்தியோகத்தர்களை மேற்படி (அ) இல் காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கேற்ப அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி பதவி வகுதிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி உதவிப்பணிப்பாளர்கள் /கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு உள்வாங்கி மேற்படி பதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— வருமான வரி (திருத்தம்) ,— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வருமான வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பெறுமதி சேர் வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டமூலம்.

3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொருளாதா சேவை விதிப்பனவு (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— நிதி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— நிதி (திருத்தம்),— 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பற்றுக்கள் வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

2.

பா.1 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

3.

பா.2 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

4.

பா.3 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை யங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

5.

பா.4 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

6.

பா.5 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

7.

பா.6 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

8.

பா.7 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

9.

பா.8 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

10.

பா.9 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

11.

பா.10 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

12.

பா.11 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயம்சாராத படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

13.

பா.12 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

14.

பா.13/ ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

15.

பா.14 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

16

பா.15 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

17.

பா.16 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

18.

பா.17 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

19.

பா.18 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

20.

பா.19 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச் சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

21.

பா.20 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாச்சார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

22.

பா.21 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

23.

பா.22 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

24.

பா.23 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

25.

பா.24 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

26.

பா.25/ ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

27.

பா.26 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

28.

பா.27 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

29.

பா.28 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

30.

பா.29 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தானங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்களாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

31.

பா.30 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

32.

பா.31/ ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

33.

பா.32 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

34.

பா.33 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

35.

பா.34 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக் குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

36.

பா.35 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனா சிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

37.

பா.36 / ' 0 8

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

38.

பா. 37 / ' 08

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

39.

பா.38/ '08

கௌரவ விஜித ரணவீர,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலகாலத்துக்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந் துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத்தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விட மாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

40.

பா.39 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

41.

பா.40 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

42.

பா.41/ '08

கௌரவ விஜித ரணவீர,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

43.

பா.44/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

*44.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர், - காணி எடுத்தற் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள்,- 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 63(2) (ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 சனவரி 20 ஆம் திகதிய 1585/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*45.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*46.

சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*47.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*48.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*49.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*50.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*51.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*52.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*53.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*54.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*55

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*56.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*57.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி

பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*58.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*59..

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*60.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*61

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*62.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*63.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

64.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

69.

இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

70.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை. .

71.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கை நிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

72.

கமகே ஆத்தர் பெரேரா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.